


திருப்பூர் மாநகராட்சி
மண்டலம் எண் : III

மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது
கி1/7134/2023-23 &15/2024
தெ.மு.54/.....
அலுவலக உத்தரவில் கண்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையருக்காக
மண்டலம் எண் : 3
திருப்பூர் மாநகராட்சி

நகர் ஊரமைப்புத் துறை (DTCP)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்
திருப்பூர்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் கிராமம் புலஎண்: 314/2A1-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

இணையதள விண்ணப்ப எண் : **S8FHXCT1**

அளவு : 1:500

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு= 1.15½ ஏக்கர் (அ) 4700.00 ச.மீ

மனைப்பிரிவின் எல்லை

நிலைமிலுள்ள சாலை / அணுகுசாலை

உத்தேச மனைப்பிரிவு சாலை

விற்பனைக்குரியவை

ஒதுக்கிய மனைகள் – 18 Nos.

கோரிய மனைகள் – 18 Nos.

பொது ஒதுக்கீடு (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு	4700.00	ச.மீ
மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு	1549.19	ச.மீ
மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு நீங்கலாக பரப்பு	3150.81	ச.மீ
10% பூங்கா பரப்பு	315.08	ச.மீ

316.00 ச.மீ பூங்கா பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி உரிய தொகையை மனுதாரர் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தி உள்ளார்

பொது உபயோகம் (உள்ளாட்சிக்கு மற்றும் TANGEDCOக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

A - உள்ளாட்சிக்கு (மொத்த பரப்பில் 0.5%) 67.23ச.மீ (2.13%)

B - TANGEDCO (மொத்த பரப்பில் 0.5%) 67.23ச.மீ (2.13%)

மூலை முடக்கு

12 மீ வரையிலான அகல சாலைகளுக்கு –1.5மீ x 1.5மீ

கட்டிட வரம்பு

9 மீ வரையிலான அகல சாலைகளுக்கு –1.5மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18 ந.நி(ம)கு.வ.துறை நாள் 04.02.2019 மற்றும் அரசானை எண்:16 ந.நி(ம)கு.வ.துறை நாள்.31.01.2020-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டு உள்ளது.
2. அரசாணை எண். 181, வீட்டுவசதிவாரியம் மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020-ன் படி உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. அரசாணை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022- ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்புர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம். குத்தகை பத்திரம். பட்டா. தானப்பத்திரம். பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து மாநகராட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்

SWP/DTCP/TIRUPPUR LPA / LAYOUT NO: 71/ 2022
PLANNING PERMISSION NO: 75/ 2022

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உதவி இயக்குநர்(மு.கூ.பொ)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர்

Document certified by Rajeshkumar.
Signed by: Assistant Director
Location:Tirupur
Date:2022.09.09 13:09:39